முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1311

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.05.2023, செவ்வாய்கிழமை

1. கலிவெல்லப் பிறந்த அவதார ஞானியே
கலியுகத்தை மீட்கவந்த ஆறுமுக அரங்கனே
அழியாமை தரவல்ல ஞானதேசிகனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே வரமென ஞானஅறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது தகர்திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2023, செவ்வாய்கிழமை)
ஞானவான் அரங்கன் உன்னை கொண்டே
ஞாலமதில் மக்களுக்கு ஞானிகளாகும் வாய்ப்பு
3. தானதர்மத்தின் வழி ஆறுமுகன்யான்
தக்கபடி வழிகாட்டல் நடத்த இருக்க
வானவர்கள் மெச்சுகின்ற அன்னதான சேவையை
வல்லமைபட உலகோர் ஏற்றுநின்றால் போதும்
4. போதுமப்பா அறத்தின் பலம்கொண்டே இந்தகலியுகத்தில்
புண்ணியவான்களை மிகுதியாக்கி ஆறுமுகன்யான்
யானுமே உலகமெங்கும் ஞானப்படைகள்
உயர்வாக அரங்கன்வழி அமைத்து இனிதே
5. காலமெல்லாம் ஞானியர்கள் நிரம்பி இருக்கும்வண்ணம்
கலியுகத்தில் ஞானசபை படைத்து
படைத்துமே யுகமாற்றம் செய்வேன்
பரோபகாரம் கொண்டே உலகில் தயவானவர்களை பெருக்கி
6. பெருக்கியே ஞானிகள் நிறைந்த
பிரணவ சக்தி கொண்ட
ஞானஆட்சியை தருவேன் உலகோர்க்கு
தக்கபலமாக தவராஜன்வழி இந்த அற்புதம் நடத்துவேன்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–